**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**அசல் வழக்கு எண். 92 /2019**

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு – 6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.
(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).
நாள் : 20.09.2025
வா.சா.: PW1–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெ. வெங்கடாச்சலம் | தந்தை/கணவர் பெயர் | : | பெரியான்பூசாரி |
| கிராமம் | : | அன்னவாசல் | தாலுகா | : | இலுப்பூர் |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | 69 | தொழில் | | விவசாயம் |

<u>முதல்விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எங்களது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. கடந்த 25.10.1928–ஆம் தேதியிட்ட புதுக்கோட்டை மாவட்ட சமஸ்தானத்தால் பெரியநைனார், சவரிக்கிழவர் கோவிலுக்கு எனது குடும்பத்தினரின் பெயரில் வழங்கப்பட்ட பூஜை செய்வதற்கான உரிமை மூலப்பத்திரம் அசலினை சான்றாவணம் **வா.சா.ஆ.1 ஆகவும்,**

2. கடந்த 24.08.1961–ம் தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள பெரியநைனார் கோவில் சர்வே எண் 502–24–ல் நன்செய் 26 செண்டிற்கான செட்டில் மெண்ட் நகல் **வா.சா.ஆ.2 ஆகவும்,**

3. கடந்த 24.08.1961–ம் தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள சபரிக்கிழவர் கோவில் சர்வே எண் 144–2–ல் நன்செய் 36 செண்டிற்கான செட்டில் மெண்ட் நகல் **வா.சா.ஆ.3 ஆகவும்,**

**( இனாம்செட்டில்மெண்ட் ஆவணங்களில் கையொப்பமிட்டவரின் சீல் இல்லை என்று 2,3 ஆவணங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது )**

4. கடந்த 12.10.2017–ம் தேதியில் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் திருச்சிராப்பள்ளியிடம் மேற்கண்ட கோவில்களின் பிரச்சினைகள்

தொடர்பாக என்னால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகலின் சான்றாவணம், **வா.சா.ஆ.4 ஆகவும்,**

5. கடந்த 22.11.2017,30.01.2018,15.05.2018 மற்றும் 31.05.2018–ம் தேதிகளில் புதுக்கோட்டை மாவட்ட இந்து சமய அழைப்பாணையின் அசலின் சான்றாவணம், **வா.சா.ஆ.5 ஆகவும்,**

6.கடந்த 05.02.2018–ம் தேதி வழக்கு சொத்தில் இருந்த மரங்களை பிரதிவாதிகள் வெட்டி எடுத்து சென்றதன் தொடர்பாக நான் புதுக்கோட்டை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறையினரிடம் கொடுத்த புகார் மனுவின் நகலின் சான்றாவணம், **வா.சா.ஆ.6 ஆகவும்,**

7. கடந்த 23.07.2018–ம் தேதியில் அன்னவாசல் காவல் நிலையத்தில் என்னால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் ரசீது நகல் சான்றாவணம், **வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.